කාර්යසාධන වාර්තාව

செயலாற்றுகை அறிக்கை

PERFORMANCE REPORT

2022

සිරකරු සුභසාධක අරමුදල

சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியம்

PRISONERS WELFARE FUND

බන්ධනාගාර දෙපාර්තමේන්තුව

சிறைச்சாலைகள் திணைக்களம்

DEPARTMENT OF PRISONS

உள்ளடக்கம்

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிதியத்தின் பெயர் - சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியம்

சிறைச்சாலைகள் திணைக்களம்.

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிதியத்தின் விவரம் / செயற்படுத்தல் பொழிப்பு	1 - 2
அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு	3 - 8
அத்தியாயம் 03 -வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை	9 - 15
அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்	16
அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை	17
அத்தியாயம் 06 - மனித வளங்கள் விபரம்	18
அத்தியாயம் 07- இணக்க அறிக்கை	19 -24

இணைப்பு

சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியச் சட்டம்	**25 - 35**

1.1. அறிமுகம்

சிறைச்சாலை நிறுவனங்களினுள் சிறைக் கைதிகளைப் புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்துவதற்காக நடாத்தப்படுகின்ற ஆன்மீகம், கல்வி, விளையாட்டு மற்றும் பின் பொறுப்புச் அலுவல்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குகின்ற நிதியமாக சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியத்தைக் குறிப்பிட முடியும்.

1.2. நிதியம் தாபிக்கப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பு/சட்டகம்

1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியச் சட்டம் (இணைக்கப்பட்டுள்ளது)

1.3. நிதியத்தின் நோக்கங்கள்.

1. கைதிகளைப் புனர் வாழ்வளிப்பதற்காகச் சக்தியொன்றை வழங்குதல்
2. கைதிகளைப் புனர்வாழ்வளிப்பதற்காக நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதியுதவி வழங்கல்
3. தற்காலத்காலத் தேவைப்பாடுகளுக்கு பொருந்தக் கூடியவாறு கைதிகளை புனர்வாழ்வளித்து நல்ல குடிமக்களாக சமூகமயப்படுத்தல்

1.4. நிதியத்தின் நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

நோக்கு

கைதிகளைப் புனர்வாழ்வளிப்பதன் மூலம் சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்துதல்

பணிக்கூற்று

கைதிகளின் நலனோம்பல் பணிகளை விதிமுறைப்படுத்துவதன் ஊடாக அவர்களின் ஊழியப் பயனை நாட்டிற்குத் பயனுள்ளவாறு பயன்படுத்திக் கொள்ளல்.

குறிக்கோள்

சிறைச்சாலைக் கைதிகளை விதி முறையாக புனர்வாழ்வளித்தல் சட்டத்தை மதிக்கும் மனிதநேயம் கொண்ட நபர்களாக மாற்றியமைத்து வளமான சமூக மொன்றை உருவாக்குவதற்காக பங்களிப்புச் செய்தல்.

1.5. முதன்மைப் பணிகள்

1. ஆன்மீக மற்றும் சமயச் செயற்பாடுகள் தொடர்பாக நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்.
2. கல்வி மற்றும் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்கல்.
3. கைதிகளின் விளையாட்டு மற்றும் ஏனைய வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்.
4. கைதிகளிற்குப் பரிசுகளை வழங்கும் நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்
5. கைதிகளின் பிற் பொறுப்புச் சேவை நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்குதல்.

1.6. நிறுவனக் குறிப்பு - இந்த நிதியத்திற்கு ஏற்புடையதல்ல.

1.7. வெளிநாட்டு உதவி பெறுகின்ற செயற்றிட்டங்களின் தகவல்கள் (இருப்பின்) - **இல்லை**

(அ) செயற்றிட்டத்தின் பெயர்
ஆ) பங்களிப்பு முகவர் நிறுவனம்
(இ) செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு - ரூ. மில்.
(ஈ) செயற்றிட்டக் காலப் பகுதி

விசேட, வெற்றிகள், சவால்கள் மற்றும் எதர்கால இலக்குகளைச் சுருக்கமாக விளக்குக.

(நிதியத்தின் தலைவரினால் கையொப்பம் இடப்படுதல் வேண்டும்)

வெற்றிகள்

- அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிலும் கைதிகளின் ஆன்மீக, கல்வி, விளையாட்டு மற்றும் பின் பொறுப்புச் சேவைகள் ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கான முறையான திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் செயற்படுத்துவதன் ஊடாக சிறைச்சாலை நிறுவனங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை சிறந்த புனர்வாழ்வளித்தல் செயற்பாடுகளுக்கு உள்வாங்கிக் கொள்ள முடிதல்.
- இந்தப் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் போது கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சி மற்றும் ஆன்மீக அபிவிருத்தியை சிறைக் கைதிகளிடத்தில் ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொண்ட அனுபவங்களினால் சிறந்த ஒரு பிரசையாக வாழ்தல்.

சவால்கள்

- சிறைக்கைதிகளின் புனர்வாழ்வுக்காக நடத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதி அடிப்பயைில் ஒதுக்கீடுகளை வழங்குகின்ற ஒரேயொரு செலவுத் தலைப்பு சிறைக் கைதிகள் நலனோம்பல் நிதியமாகும். இருப்பினும் இங்கு ஆகக் குறைந்த மீதியொன்று காணப்படுவதால் சிறைக்கைதிகளின் புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவைப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை.

எதிர்கால இலக்குகள்

- சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்திற்காக வருடாந்த வருமானத்தின் மீதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.
- விடுதலை செய்யப்படுகின்ற தொழில் பயிற்சி பெற்ற கைதிகளுக்கு வாழ்க்கைத் தொழில் உபகரணங்கள் தொகுதியொன்றை வழங்குதல்.
- சமூகத்திற்குப் பயனுள்ள ஆட்களை சமூகமயப்படுத்தல்.

எச்.எம்.ரி.என். உபுல்தெனிய
சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்

01. ஆன்மீக மற்றும் சமய நடவடிக்கைகள்.

முழு நோன்மதி போயா தினங்களில் நடாத்தப்படுகின்ற சமயப் போதனைகள், தியான நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து பௌத்த சமய நிகழ்ச்சித்திட்டங்கள், இந்து சமய அலுவல்கள், இஸ்லாம் சமய அலுவல்கள், கத்தோலிக்க சமய நடவடிக்கைகள், உளவிருத்தி மற்றும் மதியுரை நிகழ்ச்சித்திட்டங்கள்







2. கல்வி மற்றும் நலனோம்பல் நடவடிக்கைகள்

முறைசார்ந்த / முறைசாராத கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிற்பயிற்சி நடவடிக்கைகள், வாசிகசாலை அலுவல்கள்,சமயக் கல்வி,கலாச்சார அலுவல்கள்ஈ சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள், போதைப் பொருள் ஒழிப்பு மற்றம் சிகிச்சை நிகழ்ச்சித்திட்டங்கள், கைதிகளின் குடும்ப சந்திப்பு, சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன கைதிகளுக்காக நடாத்தப்பட்டன.



சிறைக்கைதிகளுக்கு கற்பித்தல் வகுப்புக்களை நடாத்துதுல்



கைதிகளின் உள அமைதிக்காக மற்றும் விருத்திக்காக நூல்களை வாசித்தல்.



கைதிகளுக்காக குடும்ப சந்திப்புக்களை நடாத்துதுல்







சட்ட உதவி
நிகழ்ச்சித்திட்டம்



கைதிகளின் சாரணர் குழு



கைதிகளின் நடனக் குழு



கைதிகளுக்காக தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதுல்



கைதிகள் பொருட்கள் எற்பத்தி செய்தல்

3. விளையாட்டு மற்றும் ஏனையவை.

சிறைச்சாலைத் திணைக்களத்தினுள் நடாத்தப்பட்ட அன்றாட விளையாட்டு அலுவல்கள், சிறைச்சாலைகளுக்கு இடையிலான போட்டிகள், சாரணர் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள்.



அன்றாட விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்



4. விசேட திறமைகளைக் காட்டுகின்ற கைதிகளுக்கு பரிசில்கள் வழங்குதல்.





1.1 அரச பிரிவுக்கான கணக்கீட்டுத் தரம் இல 01 இன் மூலம் விதிக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இதன் கீழ் உள்ளப்படுகின்றது.

1.2 குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுப் (காணப்படுமாயின்) பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா. ,000

ஒதுக்கீட்டு வகை	குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் %ஆக ஒதுக்கீட்டு பயன்பாடு
	அரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	2,000,000.00		1,666,709.00	94.0%
மூலதனம்			213,483.00	

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் தொடர்பான செயலாற்றுகை – நன்கொடை அடிப்படையில் நிதி கிடைக்கப்பெறவில்லை.

நன்கொடை வழங்கிய நிறுவனம்	நன்கொடைக்கான நோக்கம்	நன்கொடைத் தொகை
-	-	-

3.4 நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை - இந்த நிதியத்திற்கு ஏற்புடையதன்று.

ரூபா. ,000

ஆதனக் குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31 ஆம் திகதிக்கு பண்டக் கணக்கெடுப்பு அறிக்கையின் படி மீதி	2022.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை கூற்றின் படி மீதி	எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள்				
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்				
9153	காணிகள்				
9154	அருவமான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் வேலைகள்				
9180	குத்தகைச் சொத்துக்கள்				

3.5 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.**

** பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வாளர் அதிபதி அவர்களினால் வெளியிடப்பட்ட இறுதிக் கணக்காய்வு அறிக்கை ஸ்கேன் செய்யப்பட்டு (SCAN) இதில் உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : JLO/C/D/DEP/FD/2022 2023 மே 29 ஆம் திகதி

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.
சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியம்.

சிறைச்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடரப்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பளியுள்ள கருத்துரை

சிறைச்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்புப்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டு தரங்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கண்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படையான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தவிர, நிதியத்தின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை

(அ). சிறைச்சாலைகள் நிறுவனங்களுக்கு கிடைக்கின்ற நுகர்வுப் பொருட்களைக் கணக்கில் பதிவதற்கான கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்படாமை காரணமாக மீளாய்வு வருடத்தில் ரூபா. 7,860,139 நுகர்வுப் பொருட்கள் கிடைப்பனவு மற்றும் கையிருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ). திறைசேரியின் அனுமதியின்றி நிதியத்தின் நடைமுறையல்லாத சொத்துக்களை திணைக்கயத்தின் நிதிக்கூற்றுக்களில் உட்சேர்ப்பதற்கு நடவடிக்கையெடுத்து 2021 ஆம் ஆண்டில் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீண்டும் வெளியிடப்பட்டிருந்ததோடு

அன்றைய தினத்தில் இலவச சொத்துக்கள் கொடை கணக்கில் ரூபா. 24,350,099 மீதி சொத்துக்கள் அகற்றல் கணக்கின் ஊடாக சீராக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கு உரியதாக ரூபா. 12,640,730 அகற்றுதல் மிகையொன்று வெளிக்காட்டப்பட்டது. இந்த மிகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலைமைக் கூற்றில் ஒதுக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் இந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா.2,371,275 என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இந்த சொத்துக்கள் பௌதீக ரீதியாக குறிப்பாக இனங்காணப்பட்டு கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டமைக்கான சாட்சியங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய (இ.க.நி) என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கணக்காய்வுத் நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்புக்கள்.

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தை தொடர்ச்சியாகப் பேணிச்செல்லும் சாத்தியப்பாட்டைத் தீர்மாணித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு என்பதோடு முகாமைத்துவம் நிதியத்தை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றதெனில் அல்லது வேறு மாற்றீடொன்று இல்லாத போது செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனில் தவிர, தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் அடிப்படை மீது கணக்குகளைப் பேணுதல் மற்றும் நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கான விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் தொடர்பாகப் பரீட்சிக்கும் பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் சமகால நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமான விதத்தில் தனது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு ஏடுகளையும் மற்றும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு.

மொத்தமாக நிதிக் கூற்று, ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பொய் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்துரை உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடு இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன், அந்த பொருண்மையான தன்மை இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வுக்கான அபிப்பிராயம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் போது ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பொய்க் கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குகுள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பிழையாகக் குறிப்பிடுதல் காரணமாக ஏற்படும் பொருண்மையான பொய் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாகக் கருத்தைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை என்ற போதிலும் சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தனால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செயயப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தை தொடர்ச்சியாப் பேணுதல் தொடர்பாக ஐயப்பாடுகள் உள்ளதா என்பது தொடர்பில் பெறப்பட்ட கணக்காய்வுச் சாட்சியங்கள் மீது அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிதியத்தை தொடர்ச்சியாகப் பேணுதல் தொடர்பான அடிப்படைகளை பயன்படுத்துதல் பொருத்தப்பாடு தீர்மாணிக்கப்பட்டது. போதுமான ஐயப்பாடுகள் உள்ளதென நான் முடிவு செய்வதாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்லகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமற்றவையெனில் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும்.எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் மீது தொடரச்சியாகப் பேணிவருதல் முடிவடைய முடியும்.

- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்கண்டு கொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தினேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ). 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1)(ஈ)(iii) பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1)(ஈ)(iv) பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய இந்த அறிக்கையின் முனைப்பளியுள்ள கருத்துரைக்கு அடிப்படையான பகுதி 1.2 இல் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

3. வழிநடாத்தல் மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை.

பின்வருகின்ற அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றது.

	சட்டங்கள் ,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு		இணக்கமின்மை
(அ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்**		
	(i)	237	களஞ்சியசாலை வழங்களுக்காகக் கொடுப்பனவு செய்யும் போது வவுச்சரில் பண்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மற்றும் குறிப்பிட்ட பொருட்கள் பதிவேட்டில் இருப்புப் புத்தகத்தில் அந்தப் பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சான்றிதழொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும் வெலிக்கடை, பூஸா மற்றும் வட்டரக்க சிறைச்சாலைகளின் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 205,002 பண்டங்கள் இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு கொடுப்பனவு வவுச்சர்களிலும் அந்தப் பண்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்புக்கள் இடப்பட்டிருக்கவில்லை.
	(ii)	877 (2) (அ)	நிதியத்திற்காக தனியான வங்கிக் கணக்கொன்று பேணப்படவில்லை என்பதோடு நலனோம்பல் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கின் ஊடாகச் செய்யப்பட்டிருந்தது.

3.2. முகாமைத்துவச் செயற்பாடகள்

நிதியத்தின் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக செயலாற்றுகைக் குறிகாட்டிகள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதோடு சிறைச்சாலைகளில் நடாத்தப்படவேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் சுபாவம், கலந்து கொள்ளச் செய்யவேண்டிய சிறை/சந்தேக கைதிகளின் எண்ணிக்கை, செலவு செய்வதற்கு நேரிடுகின்ற கிரயத்தை உள்ளடக்கி திட்டம் தயாரிக்கப்பட்டு அந்த திட்டங்களுக்கு அமைய முன்னேற்றம் அறிக்கையிடப்படாமை காரணமாக நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுதல் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகையை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

3.3. வரவு செலவுத்திட்ட ஆவணரீதியான கட்டுப்பாடு

மீளாய்வு வருடத்தில் நிதியத்தின் வரவு செலவுத்திட்டம் மூலம் சிறைக்கைதிகளின் நலனோம்பலுக்காக இரண்டு மில்லியன் ரூபா குறித்தொதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதி போதாமை காரணமாக திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் 03 செலவு விடயங்களின் கீழ் ரூபா 2,377,848,334 ரூபா தொகை செலவு செய்யப்பட்டிருந்ததோடு நிதியத்தின் மதிப்பிடப்பட்ட கிடைப்பனவுத் தொகை ரூபா.1,437,250 ஆக இருந்த போதிலும் உண்மையான கிடைப்பனவுத் தொகை ரூபா. 2,651,796 ஆக இருந்தமையால் வரவு செலவுதிதட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கிடைப்பனவுத் தொகையை விட உண்மைக் கிடைப்பனவுத் தொகை ரூபா. 1,214,546 அதாவது நூற்றுக்கு 84.5 இனால் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும் நிதியத்தின் கிடைப்பனவுத் தலைப்பு 10 களிலிருந்து 07 கிடைப்பனவுத் தலைப்புக்களின் வரவு செலவுத்திட்ட வருமானம் மற்றும் உண்மை வருமானத்திற்கிடையில் வேறுபாடு நூற்றுக்கு 100 தொடக்கம் நூற்றுக்கு 4,063 வரையான இடைவெளியில் இடம்பெயர்ந்தமையினால் வரவு செலவுத்திட்ட மதிப்பீடு யதார்த்தமாகத் தயாரிக்கப்பட்டு கட்டுபாடொன்றாகப் பயன்படுத்தப்படடிருக்கவில்லை.

ஒப்பம்/ ஆங்கிலத்தில்,
டப்ளியூ.பி.சி.விக்கிரமசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

4.1 நிதியத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் - 2022 (அமுலாக்கல் திட்டத்தின் அடிப்படையில்)

விசேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மை வெளியீடு		
	100%- 90%	**75%-89%**	**50%- 74%**
கைதிகளை ஆன்மீக மற்றும் சமய நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதற்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.		89.0%	
கைதிகளின் கல்வி மற்றம் நலனோம்பல் அலுவல்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.	100%		
கைதிகளின் விறையாட்டுத் திறமைகளை மேம்படுத்தல் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.	94.7 %		
பல்வேறுபட்ட திறமைகளைக் கொண்டுள்ள கைதிகளுக்காக அவர்களின் திறமைகளை பாராட்டி கௌரவிப்பதற்காக பரிசில்களை வழங்குவதற்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.		83.1%	
கைதிகளின் பின் பொறுப்பு அலுவல்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் சதவீதம்.			72.5%

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக.
. இந்த நிதியத்திற்கு ஏற்புடையதன்று.

இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	அடைவுக் குறி காட்டிகள	இதுவரை அடையப் பெற்ற முன்னேற்றம		
			0%-49%	50%-74%	75%- 100%

5.2 . பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகளையும் மற்றும் சவால்களையும் சுருக்கமாக விபரிக்குக.

06.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் - இது நேரடியாக ஏற்புடையதல்ல என்பதோடு, இந்த நிதியத்திற்கு தணியான பணியாட்குழுவொன்று இல்லை. திணைக்களத்தின் அலுவலர்கள் இதில் பணியாற்றுகின்றமையினால் அலுவலர் வெற்றிடங்கள் இல்லை.

	அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்	பணியில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை	மிகை/ அதிகப்படியான எண்ணிக்கை
சிரேட்ட			
மூன்றாம் நிலை			
இரண்டாம் நிலை			
ஆரம்ப நிலை			
ஒப்பந்த/அமய			

06.2 ** நிதியத்தின் செயலாற்றுகைக்கு மனித வளப்பற்றாகுறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக.- ஏற்புடையதல்ல.

06.3 மனித வள அபிவிருத்தி - இந்த நிதியத்திற்கு ஏற்புடையதன்று.

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலப் பகுதி	மொத்த முதலீடு (ரூபா'000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு)	வெளியீடு/ பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாட்டு	வெளி நாட்டு		

*** நிறுவனத்தின் செயலாற்றுகையை அதிகரிக்கச் செய்வதற்குப் பயிற்சிகள் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதை சுருக்கமாக விளக்கு – ஏற்புடையதன்று**

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள் யாவை
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.ஒ.விதி . 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/ 2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.7	பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.8	இருப்புப் பதிவேட்டினை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.9	இழப்புக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
2.10	பொறுப்பு பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்			
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA - N20) பதிவேட்டை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்			
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி . 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன			
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் அறிவுறுத்தப்பட்டிருத்தல்/ தெரியப்படுத்தப்பட்டது			
3.3	ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.			

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள் யாவை
3.4	2014.05.11 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 171/ 2004 இன் படி, அரசு ஊதிய மென் பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக செயற்படுத்தப்படல்	-		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல் -**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல்/ பெறுகைத் திட்டம் தயாரித்தல்	-		
4.3	மீளாய்வு வருடத்திற்காக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருத்தல்	-		
4.4	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	-		
4.5	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	-		
4.6	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	-		
4.7	காலண்டு அறிக்கைகள் திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	-		
5	**கணக்காய்வு வினாக்கள் -**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் குறிப்பிட்டுள்ள திகதிகளில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	**உள்ளகக் கண்காய்வு**			
6.1	நி.இஒ.விதி 134 (2) டி.எம்.ஏ / 1 - 2019 படி , ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்	-		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது		

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள் யாவை
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40 (4) இன் அடிப்படையில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.	-		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	-		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ 1 - 2019 ஆம் எலக்க சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருத்தல்			
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்திக்கு அமைய சொத்துக்கள் பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	-		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய பொருத்தமான அதிகாரியை நியமனம் செய்து அந்த அலுவலரது தகவல்கள் கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல்	-		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	-		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த பண்டக் கணக்கெடுப்பு மூலம் மிகையான/அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	-		
8.5	நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றன	-		

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள் யாவை
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி ஓட்ட அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	-		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு (06) மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியினுள் அகற்றப்பட்டிருத்தல்			
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் அவை புதுப்பிக்கப்படுதல் வேண்டும்			
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.ஒ.வி 103, 104, 109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	-		
9.5	2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் தகனத்தை/ பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	-		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்பட்டிருத்தல்	-		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	-		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முந்திய வருடங்கள் தொடக்கம் முன்னொண்டு வரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	-		
10.3	வங்கி கணக்கிணக்க கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரி செய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	-		
11	**நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது		

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கைகள் யாவை
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	-		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவைகள் குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	-		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன் மீதிகளைத் தீர்த்தல்/ அடைத்தல்	-		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நிதி ஒழுங்குவிதிகள் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	-		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை இற்றைப்படுத்தல் மற்றும் பேணிவருதல்	-		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	-		
14.2	நி.பி .371 இன் அடிப்படையில் ஒரு நிமித்த பணிக்கான உப கட்டு நிதி வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	-		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாதவாறு ஒரு நிமித்த இடைக்கால கட்டு நிதி வழங்கல்	-		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	-		
15	**வருமானக் கணக்குகள்**			
15.1	குறித் ஒழுங்குவிதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருத்தல் வேண்டும்	-		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்	-		
15.3	நி.பி - 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	-		

16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பேணிவருதல்	-		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	-		
16.3	20.09.2017 ஆம் தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	-		
17	**பொது மக்களுக்கான தகவல்களை வழங்கல்**			
17.1	தகவலறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல். தகவல் வழங்கும் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணி வருதல்	-		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனம் தொடர்பான பொதுமக்களின் பாராட்டுக்கள் / குற்றச்சாட்டுகளை வெளியிடுவதற்கான வசதிகளைச் செய்திருத்தல்.	-		

இணைப்பு



தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியம்.

(1973 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1973 ஆம் மாதம் 18 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தாமனப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியம்.

(1973 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

எல்.டீ. – ஓ. 2/73

மறியற்காரர்கள் நலன்புரி நிதியமொன்றைத் தாபிப்பதற்காகவும் மறியற்காரர்களின் பொது நலனுக்காக அந்த நிதியத்திலிருந்து நிதியைச் செலவு செய்வதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் அதனுடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான அனைத்து விடையங்களுக்குமான ஏற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு சட்டம்.

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

1.இந்தச் சட்டம், தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியத்தைத் தாபித்தல்

2 (1) இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியம் என எடுத்துக்காட்டப்படுகின்ற ஒரு நிதியம் தாபிக்கப்படும்.

(2) நிதி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் அவர்களினால் விதிக்கப்படக்கூடிய விதத்தில் நிதியத்தின் பொதுக் கணக்கொன்று பேணிவரப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம்

3. நிதியத்தின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் மறியற்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களுக்குக் கையளிக்கப்படும்.

நிதியத்திற்குச் செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள்

4. கீழே குறிப்பிடப்படுகின்ற நிதிகள் நிதியத்தின் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(அ) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தினத்தில் மறியற்சாலைகள் திணைக்களத்தின் கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளவாறு "மறியற்காரர்கள் நலன்புரி நிதியத்தின் பொது வைப்பு நிதிக் கணக்கில்" வரவு வைக்கப்பட்டுள்ள சகல நிதிகளும்;

(ஆ). பொழுதுபோக்குப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கின்ற தேறிய பெறப்பட்ட தொகையில் செயலாளரினால் காலத்திற்குக் காலம் தீர்மாணிக்கப்படக் கூடிய பகுதி ;

(இ). மறியற்காரர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட கட்டாய அறவீடு;

(ஈ). மறியற்காரர்களின் நலன்புரிக்காக பொதுமக்களினால் செய்யப்படுகின்ற ஏதேனும் நன்கொடைகள் ;

(உ) மறியற்சாலைகள் தொழிலாளர்களின் சேவை வழங்களுக்காக அறவீடாக அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து அறவிடப்படுகின்ற ஏதேனும் நிதி;

(ஊ) அங்கீகாரம் பெறப்படாமல் மறியற்காரர்கள் தம்வசம் வைத்திருந்து, கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(எ) மறியற்சாலை நிலையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட உரித்து உறுதி செய்யப்படாத ஏதேனும் பணத்தொகை;

(ஏ). (i). மறியற்சாலைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற விற்பனை அறைகள் மூலம்.

(ii). மறியற்கார்களினால் தயாரிக்கப்பட்ட பொழுதுபோக்குப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம், மற்றும்

(iii). மறியற்சாலைகளில் நடாத்தப்படுகின்ற உணவகங்களிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற தேறிய இலாபம் ; மற்றும்

(ஐ) நிதி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கக் கூடிய நிதியத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற வேறு உதவித் தொகைகள்.

நிதியத்திலிருந்து நிதியைச் செலவு செய்தல்

5. நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள நிதிகள் செயலாளரினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கமைய கீழேயுள்ள பணிகளில் ஏதேனும் ஒன்றுக்காகச் செலவு செய்வதற்கு மறியற்சாலைகள் ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு அதிகாரம் உள்ளது :-

(அ). மறியற்காரர்களின் ஆண்மீக மற்றும் சமய நலன்களுக்காக,

(ஆ). மறியற்காரர்களின் கல்வி நலன்களுக்காக,

(இ). மறியற்காரர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காக,

(ஈ). மறியற்காரர்களுக்குப் பரிசில்களை வழங்குவதற்காக,

(உ) கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் மறியற்காரர்களுக்காக உணவகங்களைப் பேணிச் செல்வதற்காக , மீளச் செலுத்தக்கூடிய முற்பணங்களை வழங்குதல்.

நிதியாண்டு

6. நிதியத்தின் நோக்கங்களுக்கான நிதியாண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதியில் ஆரம்பித்து திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஒரு வருடமாகும்.

கணக்கு மற்றும் கணக்காய்வு

7 (1) நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு நிதி வருடமும் நிறைவடைந்த பின்னர் இயன்றளவு விரைவாக நிதியத்தின் அலுவல்கள் நிறைவேற்றப்பட்ட முறையைக் காட்டக்கூடியவாறானதும், நிதியத்தின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களினதும் முழுமையான விபரங்கள் உள்ளடக்கப்பட்டதுமான முழுமையான கூற்றொன்று மறியற்சாலைகள் ஆணையாளர் அவர்களினால் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையின் பிரதியொன்று சகிதம் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அமைச்சர் அவர்கள் முடியுமான கதியில் அவ்வறிக்கையைத் தேசிய அரசுப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொருள் கோடல்

8. இந்த அறிக்கையில் " செயலாளர் " என்பது மறியற்சாலைகள் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

(24)



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

1979 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களம்—மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் (திருத்தச்) சட்டம்.

[1979, ஒகத்து மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1979, செத்தெம்பர் மாதம் 07 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 20 நபாற் செலவு : சதம் 25

1979 ஆண்டின் 54 ஆம் இலக்க, மறியற்சாலைகள் நிணைக்களம்—மறியற் காரர்கள் நலன்புரி நிதியச் (திருத்தச்) சட்டம்

[1979, ஒகத்து மாதம் 30 ஆந் தேதி அத்காட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—இ. 79/75

1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் நிணைக்களம்—மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1979 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, மறியற் சாலைகள் நிணைக்களம்—மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் நிணைக்களம்—மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அஅ) எவரேனும் மறியற்காரர் விடுதலைசெய்யப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குக் குறையாதவொரு காலத்திற்குக் கோரப்படாமல் இருப்பதும், பொது வைப்பு—மறியற்காரர்களின் கூலிகளும், தனிப்பட்ட காசும் எனும் கணக்கில் அத்தகைய மறியற்காரரின் வரவிலுள்ளதுமான அத்தகைய ஏதேனும் பணத்தொகை;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அப்பிரிவின் முடிவில் காணப்படும் முற்றுப்புள்ளிக்குப் பதிலாக அரைப்புள்ளியொன்றை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ii) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஊ) மறியற்காரர்களை மறியற்சாலையிலிருந்து விடுவித்த பின்னர் அவர்களின் புனர்வாழ்விற்கு உதவக்கூடிய அத்தகைய பிற்பாட்டுக் கவனிப்புச்சேவைகள்.".

A 12842—6,700 (79/07)

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் இறுதிக் கணக்கு - 2022
2022.12.31 ஆம் திகதியில் நிதி நிலைமை பற்றிய கூற்று

விபரம்	குறிப்பு	2022 வருடம்	2021 வருடம்
		ரூபா.	ரூபா.
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
அட்டுறு வருமானம்			376.00
சிறை ஊழியம் வழங்கல் மூலம் கிடைக்க வேண்டிய தொகை		7,460	15,860
மீள அறவிடக் கூடிய முற்பணம்		1,880	1,880
2021.12.31 திகதியில் 6/28 நிதியத்தின் மீதி		5,299,068	4,527,464
		5,308,408	**4,545,580**
நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**-**	
மொத்தச் சொத்துக்கள்		**5,308,408**	**4,545,580**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்		**-**	-
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		**-**	-
மொத்தப் பொறுப்புக்கள்		**-**	-
தேறிய சொத்துக்கள்		**-**	**-**
தேறிய சொத்துக்கள்/ உரிமை		-	-
ஒதுக்கம்		-	-
முன் கொண்டுவந்த மீதி		4,545,580	3,636,750
2022 வருடத்தின் மிகை		758,638	908,830
தொங்கற் கணக்கு		4,190	-
தேறிய சொத்துக்கள்/ உரிமை		**5,308,408**	**4,545,580**

தயாரித்தவர் :
பெயர் - எஸ்.கே. இனோக்கா லக்மிணீ
பதவி - முகாமைத்துவ சேவை அலுவலர்
திகதி -

பரீட்சித்தவர் :
பெயர் - எஸ்.டீ.என்.சீ. தில்ருக்ஷி
பதவி - முகாமைத்துவ சேவை அலுவலர்
திகதி -

மேற்படி நிதிக் கூற்று இலங்கை அரச துறை கணக்கீட்டு தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காக சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் மிகை மற்றும் 2022.12.31 ஆம் திகதியில் அதன் செயற்பாடுகள் தொடர்பில் உண்மையான மற்றும் நியாயமான நிலைமைகள் மேற்படி நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

கணக்காளர்
பெயர் - எச்.ஏ.சீ.பி.தர்மரத்ன
பதவி - பிரதி ஆணையாளர் (நிதி)
திகதி -

பிரதான கணக்காளர்
பெயர் -ஆர்.எம்.என்.கே.கே.அபேரத்ன
பதவி – சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிதி)
திகதி -

1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவப் பொறுப்பு எனக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த நிதிக்கூற்று மற்றும் உரிய ஆவணங்களை அனுமதிக்கின்றேன்.

கணக்கீட்டு அலுவலர்
பெயர் - எச்.எம்.ரீ.என். உடுல்தெனிய
பதவி - சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (நிதிய நிர்வாகம்)
திகதி -

பிரதான கணக்கீட்டு அலுவலர்
பெயர் -
பதவி -
திகதி -

கணக்கு அலுவல்கள் தொடர்பான வெளிப்படுத்தல்கள்

01. இந்த நிதியம் பின்வருகின்ற சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்தப்படுகின்றது.

(i) தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியம்.

(ii) 1976 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதிய, மறியற்சாலைகள் திணைக்களத்தின் மறியற்காரர்கள் நலன்புரி நிதியச் சட்டத்தை திருத்தம் செய்தல் சட்டம்.

02. சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியம் சிறைச்சாலைகள் தலைமையகம் உள்ளிட்ட 29 பிராந்திய சிறைச்சாலை நிறுவனங்களில் செயற்படுத்தப்படுகின்றது.இந்த அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களின் கணக்குக் கூற்றுக்கள் ஒப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டு நிதியத்தின் திறைசேரி மீதியுடன் ஒப்பிடப்பட்டு சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியம் சட்டத்தின் 07(2) பந்திக்கு அமைய 2022 ஆண்டு நிறைவடைந்த பின்னர் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

03. 1977 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 836 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 10 ஆம் பந்திக்கு அமைய சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்திற்காக விசேடமாக வங்கிக் கணக்கொன்று பேணப்பட்டு வருவதில்லை என்பதோடு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கின் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

04. 2021.12.31 திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2013-3 மற்றும் 2013.10.02 ஆம் திகதிய 03/2013 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய மற்றும் இலங்கை அரச துறை கணக்கீட்டு தரங்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்டுள்ளது.

05. இலங்கை அரச துறை கணக்கீட்டு தரம் 01 இன் பிரிவுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பெறுமதிகளை சமர்ப்பிக்கும் போது மிகவும் புரிந்து கொள்ளத்தக்கதாக மாற்றுவதற்காக ரூபா பெறுமதிக்கமைய பெறுமானங்கள் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

06. சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் கணக்கு வருடம் ஒவ்வொரு வருடமும் சனவரி 01 ஆம் திகதி ஆரம்பித்து மிளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும்.

07. சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியச் சட்த்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள பின்வருகின்ற வருமானத் தலைப்பு வகுதிக்குள் அடங்குகின்ற வருமானங்கள் மாத்திரம் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் வருமானங்களாக சேகரிக்கப்பட்டுள்ளது.

(i) பொழுதுபோக்குப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கின்ற தேறிய வருமானத்தில் ஒரு பகுதி

(ii) மறியற்காரர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட கட்டாய அறவீடு

(iii) பொதுமக்களினால் செய்யப்படுகின்ற நிதி நன்கொடைகள்

(iv) சிறைக்கைதிகளின் ஊழியத்தை வழங்கி ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து அறவிடப்படுகின்ற நிதி.

(v) அங்கீகாரம் பெறப்படாமல் மறியற்காரர்கள் தம்வசம் வைத்திருந்து, கண்டுபிடிக்கப்பட்ட பணத்தொகைகள்.

(vi) மறியற்சாலை நிலையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட உரித்து உறுதி செய்யப்படாத பணத்தொகைகள்

(vii) வியாபார நிலையங்கள், கண்காட்சிகள், உணவகங்கள் மூலம் கிடைக்கின்ற தேறிய இலாபம்

(viii) உரித்து உறுதி செய்யப்படாத ஏதேனும் பணத்தொகைகள்.

(ix) ஏனைய பங்களிப்புத் தொகைகள்

(x) மறியற்காரர்கள் சட்டவிரோதமான விதத்தில் வைத்திருந்து, கண்டுபிடிக்கப்பட்ட பணத்தொகைகள்.

08. சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் அலுவல்களை பேணிச்செல்வதற்காக அரச பங்களிப்புக்கள் இதுவரை பெறப்படவில்லை. அதன் வருமானங்கள் மிகவும் நிச்சயமற்ற சேகரிப்புக்களை உள்ளடக்கியதாகும்.அகவே வருடத்திற்கான மதிப்பீட்டின் கூலம் செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட சிறைக்கைதிகளின் நலனோம்பலுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள், அனுசரணை வழங்குகின்ற சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியதாய்ச் சங்கம், சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் உபகுழு, அரச சார்பற்ற அமைப்புக்கள், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் எனைய தொண்டர் அமைப்புக்கள் போன்ற அமைப்புக்களின் அனுசரணையில் மெற்கொள்ளப்பட்டன .

09. சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் கிடைப்பனவுத் தலைப்புக்களுக்கு அமைய ஒவ்வொரு சிறைச்சாலை நிறுவனங்களின் கிடைப்பனவுகள் 16 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

10. சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் இதுவரை காணப்பட்ட சொத்துக்களை 2020 ஆம் ஆண்டு தொடக்கம் ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, சிறைச்சாலைக் கைத்தொழில் பிரிவு மற்றும் சிறைக்கைதிகள் நலனோம்பல் பிரிவு ஆகிய அனைத்து கணக்குகள் மூலம் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் சிறைச்சாலைகள் நிறுவனத்தினுள் காணப்படுவதோடு அந்த அனைத்து சொத்துக்களும் ஒதுக்கீட்டுக் கணக்கின் ஊடாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

திகதி:

சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிதி)

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் இறுதிக் கணக்கு - 2022

2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தின் நிதிச் செயலாற்றுகைக் கூற்று (வருமானச் செலவுக் கணக்கு)

	2022 வருடம். ரூபா	2021 வருடம். ரூபா
வருமானம்		
01.வியாபார நிலையங்களிலிருந்து கிடைத்த பங்களிப்புத் தொகை	-	-
02. கண்காட்சிகள் மூலம் கிடைத்த பங்களிப்புத் தொகை	47,620	-
03. சிறைக்கைதிகளின் வேதனங்களிலிலிருந்து அறவிடப்படுகின்ற கட்டாய அறவீடு	59,074	105,357
04. சிறை ஊழிய வழங்கல் சார்பாக வேறு திணைக்களங்களிலிருந்து நிதி அறவீடு	1,300,480	547,327
05. உரித்துக் கோரப்படாத பணம்	1,157,395	110,681
06. சிறைச்சாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட உரிமையாளர் இல்லை	14,460	26,944
07. ஏனைய பங்களிப்புத் தொகை	1,000	12,500
08. சட்ட விரோதமாக சிறைக்கைதிகள் தம்வசம் வைத்திருந்த பணம்	62,271	106,020
09. பொழுது போக்குப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கப்பபெற்ற தேறிய வருமானத்தில் 1/6 பகுதி	720	
மொத்த வருமானம்	**2,643,020**	**908,830**
செலவுகள்		
01. சிறைக்கைதிகளின் ஆண்மீக மற்றும் சமயச் செலவுகள்	518,996	-
02. சிறைக்கைதிகளின் கல்வி மற்றும் நலனோம்பல் செலவுகள்	509,345	-
03. சிறைக்கைதிகளின் விளையாட்டு மற்றும் வேறு வசதிகள் செலவுகள்	506,103	-
04. சிறைக்கைதிகளுக்கு பரிசு வழங்கல் செலவுகள்	281,898	-
05. பின்பொறுப்புச் சேவை செலவுகள்	63,850	-
06. தொங்கற் கணக்குகள்	4,190	
மொத்தச் செலவுகள்	**1,884,382**	
காலப்பகுதிக்கான மிகை	**758,638**	**908,830**

தயாரித்தவர் :

பரீட்சித்தவர் :

சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிதி)

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்
(நிதிய நிர்வாகம்)

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்தின் இறுதிக் கணக்கு - 2022

2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான கிடைப்பனவு மற்றும் கொடுப்பனவுக் கணக்கு

	2022 வருடம் ரூபா.	2021 வருடம் ரூபா.
2022.01.01 **ஆம் திகதியில் முன் கொண்டுவரப்பட்ட மீதி**	4,527,464	3,618,634
(+)		
01. வியாபார நிலையங்களிலிருந்து கிடைத்த பங்களிப்புத் தொகை	-	
02. கண்காட்சிகள் மூலம் கிடைத்த பங்களிப்புத் தொகை	47,620	
03. சிறைக்ககைதிகளின் வேதனங்களிலிலிருந்து அறவிடப்படுகின்ற கட்டாய அறவீடு	59,450	105,357
04. சிறை ஊழிய வழங்கல் சார்பாக வேறு திணைக்களங்களிலிருந்து நிதி அறவீடு	1,308,880	547,327
05. உரித்துக் கோரப்படாத பணம்	1,157,395	110,681
06. சிறைச்சாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட உரிமையாளர் இல்லை என உறுதியான பணம்	14,460	26,944
07. ஏனைய பங்களிப்புத் தொகை	1,000	12,500
08. சட்ட விரோதமாக சிறைக்கைதிகள் தம்வசம் வைத்திருந்த பணம்	62,271	106,020
09. பொழுது போக்குப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கப்பபெற்ற தேறிய வருமானத்தில் 1/6 பகுதி	720	-
(-)	2,651,796	4,527,464
01. சிறைக்கைதிகளின் ஆண்மீக மற்றும் சமயச் செலவுகள்		
மூலதனம்	22,998	
மீண்டெழும்	495,998	
02. சிறைக்கைதிகளின் கல்வி மற்றும் நலனோம்பல் செலவுகள்		
மூலதனம்	17,000	
மீண்டெழும்	492,345	
03. சிறைக்கைதிகளின் விளையாட்டு மற்றும் வேறு வசதிகள் செலவுகள்	.	
மூலதனம்	150,485	
மீண்டெழும்	355,618	
04. சிறைக்கைதிகளுக்கு பரிசு வழங்கல் செலவுகள்		
மூலதனம்	23,000	
மீண்டெழும்	258,898	
05. பின்பொறுப்புச் சேவைச் செலவுகள்		
மூலதனம்	-	
மீண்டெழும்	63,850	
	1,880,192	
2022.12.31 ஆம் திகதியில் முன் கொண்டு செல்லப்பட்ட மீதி	**5,299,068**	**4,527,464**

தயாரித்தவர் :

பரீட்சித்தவர் :

சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிதி)

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்

(நிதிய நிருவாகம்)

சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியம்
2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான
ஒன்றிணைந்த நிதிப் பாய்ச்சல் கூற்று

விபரம்	2022	2021
	ரூபா.	ரூபா.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்		
கிடைப்பனவுகள்		
கண்காட்சிகள் மூலம் கிடைப்பனவு	47,620	-
சிறைக்ககைதிகளின் வேதனங்களிலிலிருந்து அறவிடப்படுகின்ற கட்டாய அறவீட்டுக் கணக்கு	59,450	105,357
சிறை ஊழிய வழங்கல் சார்பாக வேறு திணைக்களங்களிலிருந்து நிதி அறவீடு	1,308,880	547,327
உரித்துக் கோரப்படாத பணம்	1,157,395	110,681
உரிமையாளர் இல்லை என உறுதியான பணம்	14,460	26,944
சட்ட விரோதமாக சிறைக்கைதிகள் தம்வசம் வைத்திருந்த பணம்	62,271	106,020
ஏனைய பங்களிப்புத் தொகை	1,000	12,500
பொழுது போக்குப் பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கப்பபெற்ற தேறிய வருமானத்தில் 1/6 பகுதி	720	-
	2,651,796	908,830
கொடுப்பனவுகள்		
ஆண்மீக மற்றும் சமயச் செலவுக் கணக்குகள்	518,996	-
சிறைக்கைதிகளின் கல்வி மற்றும் நலனோம்பல் செலவுக் கணக்கு	509,345	-
சிறைக்கைதிகளின் விளையாட்டு மற்றும் வேறு வசதிகள் செலவுக் கணக்கு	506,103	-
சிறைக்கைதிகளுக்கு வழங்கப்பட்ட பரிசில்களுக்கான செலவுக் கணக்கு	281,898	-
சிறைக்கைதிகளின் பின்பொறுப்புச் சேவை அலுவல்கள் செலவுக் கணக்கு	63,850	-
	1,880,192	-
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல்	771,604	908,830
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்		
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல்		**-**
காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/குறைவு	771,604	908,830
காலப்பகுதி ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	4,527,464	3,618,634
காலப்பகுதி முடிவில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	**5,299,069**	**4,527,464**

தயாரித்தவர்:

பரீட்சித்தவர்:

சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிதி)

சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியம்
2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான
உரிமை மாற்றக் கூற்று (திரண்ட நிதியம்)

		மொத்தம்
2022 சனவரி 01 ஆம் திகதியில் மீதி	4,545,580	4,545,580
(+) 2022 இற்கான தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றம்		
தேறிய சொத்துக்கள / உரிமைகளில் இனங்காணப்பட்ட தேறிய வருமானத்தின் அதிகரிப்பு		
காலப்பகுதிக்கான மிகை	758,638	758,638
2022.12.31 ஆம் திகதியில் மீதி		**5,304,218**

தயாரித்தவர் :

பரீட்சித்தவர் :

சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிதி)